PRANAV JOURNAL OF FINE ARTS
ISSN: 2582-9513

# இராசசிம்மன் கலைப் பாணியில் உருவான தமிழகக்கோயில் ஆய்வுகள்

முனைவர்.இரா.தேவி
உதவிப்பேராசிரியர், வரலாற்றுத்துறை
அ.து.ம மகளிர் கல்லூரி, நாகப்பட்டினம்

**ஆய்வின் நோக்கம்**

பல்லவ மன்னர்கள் தங்களது ஆட்சி காலத்தில் குடைவரை, ஒற்றைக்கல் மற்றும் கட்டுமானம் எனும் மூன்று கட்டமைப்புகளில் கோயில்களை அமைத்து தங்களது தனித்திறமைகளை வெளிப்படுத்தி வந்துள்ளனர்.சிவனுக்கெனஇக்கோயில்கள்அமைக்கும்பணியானதுஇவர்களதுகாலம்முதலேதுவங்கியதுஎனலாம்.

அவ்வகையில்இராசசிம்மன்தனதுஆட்சியில்கருங்கற்களைக்கொண்டுகட்டுமானகோயில்கள்அமைக்கும்பணியில்ஈடுபட்டுகாஞ்சிபுரம்,பனைமலை,மகாபலிபுரம்போன்றமுக்கியஇடங்களில்கலையம்சங்கள்கொண்டகோவில்களைஅமைத்துள்ளான்.கட்டிடக்கலைமற்றும்சிற்பக்கலைசார்ந்தஅவற்றின்சிறப்பியல்புகள்மற்றும்அவற்றினிடையேகாணப்படும்ஒற்றுமைமற்றும்வேற்றுமைகளைவெளிப்படுத்துவதேஇவ்வாய்வின்நோக்கமாகும்.

**ஆய்வுச்சுருக்கம்**

சங்க காலத்தில் , தமிழகத்தில் இருந்த கோயில்கள் செங்கல் , சுதை, மரம் போன்ற அழியக்கூடிய பொருட்களைக் கொண்டு கட்டப்பட்டதென இலக்கியங்கள் வழி அறிகிறோம் . நடுகற்கள் நடுதல் , பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் அமைப்பதற்கே கருங்கற்கள் பயன்பட்டன . எனவே

ISSN: 2582-9513

இறைவனுக்கு கோயில் அமைப்பதற்கு இக்கற்களைப் பயன்படுத்துவது தவிர்க்கப்பட்டது. தொடர்து தக்காணத்துடன் ஏற்பட்ட தொடர்பானது இந்துசமயக் கடவுளர்கரளுக்கு குடைவரை அமைக்கும் முறைக்கு வித்திட்டது எனலாம் . அவ்வகையில் பல்லவமன்னன் மகேந்திரவர்மன் தமிழகத்தில் குடைவரைக்கலையை முதன்முதலில் அறிமுகப்படுத்தியவன் என்று புகழப்படுகிறான் . இவரது மகன் முதலாம் நரசிம்ம வர்ம பல்லவன் மகாபலிபுரத்தில் ஒற்றைக்கல் கோவில்களை நிர்மாணித்த hன். தொடர்ந்துவந்த இராசசிம்மன் எனப்படும் இரண்டாம் நரசிம்ம வர்ம பல்லவன் காஞ்சிபுரத்தை தனது புதிய தலைக்கராகக் கொண்டு அங்கு கட்டுமானக்கோவில்களை அமைக்கும் கலையை கற்றறிந் தான் எனலாம். கற்றளிகளில் காணப்படும் இம்மன்னனது தனிப்பபட கலைப்பாணியானது பின்வரும் கோயில்களில் எடுத்துக்காட்டப்படுகிறது.

**திறவுச்சொற்கள்**

இரண்டாம்நரசிம்மவர்மபல்லவன், விசித்திரசித்தன், கற்றளி, யாளி, அதிட்டானம், மாமல்லபுரம்.

**முன்னுரை**

உலகில் இறைவழிபாடு மற்றும் மனிதன் இறைவனுக்குக் கோயில் அமைத்து வழிபடும் நிலை என்பது மிகத் தொன்மைக் காலத்திலேயே ஏற்பட்டுள்ளது. வரலாற்றுக்கு முற்பட்ட காலமனிதன் மலைகளில் இயற்கையாக அமைந்த குகைகளில் தனது வசிப்பிடத்தை அமைத்து கொண்டதுடன், நாளடைவில் இக்குகைகளை வழிபடும் இடமாகவும் மாற்றினான். நாகரிக வளர்ச்சியினால் இயற்கையான குகைகளை விடுத்து பாறைகள், குன்றுகளை குடைவரைகளாக மாற்றி , அதில் இறைவனை

ISSN: 2582-9513

அமைத்தான். இந்தியாவில் இதுவரை ஆயிரத்து இருநூறுக்கும் மேற்பட்ட குடைவரைகள் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றில் 900 பௌத்த சமயத்துடனும், 300சமண சமயத்துடனும் தொடர்புடையவை.[1]

தமிழகத்தில் பல்லவர்களின் ஆட்சி சிம்மவிஷ்ணு (கி.பி. 556 - 590) காலத்தில் இருந்து தான் முழுமையாகத் தொடங்குகிறது. இவரது மகன் முதலாம் மகேந்திரவர்மன் (கி.பி 590 - 630) மண்டகப்பட்டு, திருச்சிராப்பள்ளி, பல்லாவரம், வல்லம், மாமண்டூர், தளவானூர், சீயமங்கலம், மகேந்திரவாடி போன்ற இடங்களில் பாறைகளை குடைந்து கோயில்களை அமைத்தான். அதன் காரணமாக விசித்திரசித்தன் எனவும் புகழ்பெற்றான். தொடர்ந்து அவரது மகன் முதலாம் நரசிம்மவர்ம பல்லவன் கிபி 630 ல் ஆட்சிக்கு வந்தான். மகேந்திரவர்மனால் மாமல்லபுரத்தில் தொடங்கப்பட்ட சிற்ப வேலைப்பாடுகளும், குடைவரைக்கோயில் பணிகளும் தொடர்ந்து இவனால் நிறைவேற்றப்பட்டன.[2]

கி.பி 7 ம் நூற்றாண்டின் இறுதியில் அரசாண்ட இரண்டாம் நரசிம்மவர்மன் எனப்படும் இராசசிம்மன் காலத்தில் கற்றளிகள் அமைக்கும் முறை ஏற்பட்டது. கற்றளி என்பது கற்கோயில் எனப் பொருள்படும். கருங்கற்களை ஒன்றின் மீது ஒன்றாக அடுக்கிக் கட்டப்படும் கோயில் கட்டடங்களுக்கு கற்றளி எனப்பெயர்.[3]

இராசசிம்மன் சாருக்கியருடன் ஏற்பட்ட பகைமையின் விளைவாக, சிற்ப மற்றும் கட்டிட நுட்பங்களில் தனது சாதனைகளை வெளிப்படுத்தும் வகையில் கோயிலை அமைத்தார் அவ்வகையில் இம்மன்னனது கலைப்பாணியை முழுமையாக தன்னகத்தே கொண்ட பனைமலை சிவன் கோயில் , முகுந்த நாயனார் கோயில் , மாமல்லபுரம் கடற்கரை கோயில் மற்றும் காஞ்சி

ISSN: 2582-9513

கைலாசநாதர் கோயில் ஆகியவற்றின் சிறப்புகளை ஒரு சிறு ஆய்வாக மேற்கொண்டு "இராசசிம்மன் கலைப்பாணியில் உருவான தமிழகக் கோயில் ஆய்வுகள்" எனும் இக்கட்டுரையில் வெளிப்படுத்துகிறது.

**பனைமலை - தாளகிரீஸ்வரர் கோவில்**

தென்னாற்காடு மாவட்டம் , விழுப்புரம் வட்டம் , விழுப்புரம் இரயில் நிலையத்திலிருந்து தென்மேற்கே 16 வது கல்லில் பனை மலை என்னும் சிற்றூரில் இக்கோவில் அமைந்துள்ளது. இம்மலையின் உச்சியில் இளஞ்சிவப்பு நிற கிரானைட் கற்களால் கட்டப்பட்டுள்ளது சிறப்பானது.[4]

**அதிட்டானம் மற்றும் கருவறையின் அமைப்பு**

இக்கோயிலின் தரையமைப்பு பிற பல்லவர் கோயில்களின் தரையமைப்பிலிருந்து வேறுபட்டு காணப்படுகிறது. கோவில் விமானம் திரிதள விமானமாகக் காட்சியளிக்கிறது. கிழக்கு நோக்கிய இக்கோவிலின் அடிப்பகுதி தளங்கள் சதுரமாகவும், அடித்தளத்தின் தெற்கு, மேற்கு, வடக்குப் பக்கங்களில் அதிட்டானத்தின் தொடர்ச்சியாக அமையும் தொடர்புடைய பகுதிகளின் மேற்புறம் நீள்சதுர கருவறைகள் உள்ளன. அதிட்டானம் (தாங்குதளம்) என்பது கட்டடத்தின் அல்லது கோயிலின் அடித்தளமாக விளங்குவதாகும்.[5] இக்கோயிலின் அதிட்டானம் பாதபந்த வகையைச் சேர்ந்தது. இதில் ஜகதியின் பாதப்பகுதி கீழ்நோக்கிய சுருள் பத்ம இதழ்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. முப்பட்டைக்குமுதத்தில் ஊர்த்துவ மற்றும் அதோ பத்ம இதழ்களில் அலங்கார வேலைப்பாடு இடம்பெற்றுள்ளது. தொடர்ந்து வரும் கண்ட பகுதியில் காலபாதமானது யானையின் உருவத்துடன் அழகுற அமைந்துள்ளது.[6] மையக்கருவறையைப் போலவே பக்கவாட்டிலும் கிழக்கு நோக்கிய இரு கருவறைகள், மற்றும் மேற்கு நோக்கிய பின்புற கருவறையும் காணப்படுகிறது.

ISSN: 2582-9513

இவற்றின் மையத்தில் சிவலிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.[7]

**சோமாஸ்கந்தர் சிற்பம்**

பனைமலை கோவில் கருவறை சுவர்களில் குறிப்பாக பின்புறச் சுவரில் சோமாஸ்கந்தர் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது.[8] இதனை காணும்போது கருவறையில் லிங்கப்பீடமின்றி தரையில் அமைக்கப்பட்டுள்ள, பட்டைகருடைய லிங்கத்தின் பின்புறம் , அதன் உச்சி பகுதிக்கு மேலே தெரியும்படியாக , உயரமான மாடத்தில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். நிமிர்ந்து நிற்கும் யாளிகள் இராசசிம்மனது கலைப்பாணிக்கேயுரிய தனிச் சிறப்பான நிமிர்ந்து நிற்கும் யாளிகளது உருவச்சிற்பங்களைக் கொண்ட சதுரத்தூண்கள் அடித்தளத்தின் சுவர்களின் மூலைகள் மற்றும் இதனுடன் இணைக்கப்பட்ட கருவறைச் சுவர்களின் மூலைகளிலும் காணப்படுகின்றது. இத்தகைய பெரிய அளவிலான அரிமாக்களை காஞ்சி கைலாசநாதர் கோயிலில் காணலாம். இவை மூலையிலுள்ள சுவர்த்தூண்களைத் தாங்கி நிற்பது போல் அமைக்கப்பட்டுள்ளது. உச்சித்தளத்தின் மூலைகளில் பூதவடிவங்கள் சங்கூதும் நிலையில் காட்சியளிக்கின்றன. யானைத்தலையின் மீது பின்னங்கால்களை ஊன்றி அதனை நசுக்குவது போன்ற அரிமாக்களின் உருவங்கள் இராசசிம்மன் தனது எதிரிகளாகிய யானைகளை நசுக்கினான் எனக்கூறும் இக்கோயில் கல்வெட்டு குறிப்புகளை சிற்ப வடிவில் எடுத்துரைக்கிறது.காஞ்சி கைலாசநாதர் கோயிலின் சிறிய அமைப்பே பனைமலை சிவன் கோயில் என்பது பல வகைகளில் புலனாகிறது. கருவறை வாயில் , கிழக்கு, மேற்கு நோக்கியுள்ள சுற்றிலுமுள்ள மாடக்குழிகளின் வாயில் , சோமாஸ்கந்தர் சிற்ப அணிகள் , அரிமாவின் உருவம், விமானம் மற்றும் அடித்தள வார்ப்புகள் ஆகியவை ஒரே மாதிரியாக தோற்றம் பெற்றுள்ளன. கி.பி 8 ஆம் நூற்றாண்டில் பல்லவரது

ISSN: 2582-9513

கட்டடக்கலைக்கு சிறந்த உதாரணமாக இக்கோயில்கள் அமைந்தன எனலாம்.

**முகுந்த நாயனார் கோவில்**

மாமல்லபுரத்திலிருந்து வடக்கே அமைந்துள்ள பண்டைய சாருவன்குப்பத்தில் முகுந்த நாயனார் சிவன் கோவில் காணப்படுகின்றது. இது ஏறத்தாழ 12 அடி ஆழத்தில் புதையுண்டு பின்னர் கண்டறியப் பட்டதாக கூறப்படுகிறது. இதன் அடிப்பாகம் சதுரம் , மேற்புறத்தில் எண்கோண வடிவிலான கிரீவ , சிகரமுடைய திராவிட வகையைச் சார்ந்த துவிதள விமானமாகக் காட்சி தருகிறது.

விமானம் என்பது அதிட்டானம் (அடிப்பகுதி) , பாதம் (சுவர் பகுதி) பிரஸ்தரம் (கூரைப் பகுதி) , கிரீவம் (கழுத்துப்பகுதி) சிகரம் (தலைப்பகுதி) , ஸ்தூபி (உச்சிப் பகுதி) ஆகிய ஆறு அங்கங்களை உள்ளடக்கிய ஒட்டுமொத்த அமைப்பினைக் குறிப்பாக அமைந்துள்ளது. மேலும் கருவறையின் மீது காணப்படும் உயரமான கட்டுமான அமைப்பைக் குறிக்கும் சொல்லாகவும் விளங்குகிறது. இந்த ஆறு அங்கங்களும் முறையே அடி , உடல், தோள், கழுத்து,தலை, முடி முதலான மனித உடலமைப்பை அடிப்படையாகக் கொண்டு அமைந்தனவாகும்.[9]

இக்கோயிலில் வரிகளையுடைய ஒரு லிங்கம் , கருவறையின் பின்புறச் சுவரில் சோமாஸ்கந்தர் சிற்ப அணி , முகப்பைத் தாங்கி நிற்கும் இரு தூண்கள் போன்றவை இம்மன்னனின் கலையம்சங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளன. கோபுரத்தின் உச்சியில் காணப்படும் வட்ட வடிவிலான துமிளியைக் காணும் போது இது பல்லவர் பாணியிலிருந்து வேறுபட்டு விளங்குவதை அறியலாம்.

**மாமல்லபுரம் கடற்கரைக் கோயில்**

இரண்டாம் நரசிம்மவர்மனான இராசசிம்மன் மாமல்லன் எனவும் ,

ISSN: 2582-9513

இவனது பெயராலேயே இவ்வூர் மாமல்லபுரம் எனவும் அழைக்கப்படுகிறது. இவ்வூரின் கடலோரம் அமைந்துள்ளது கடற்கரை கோயில் ஆகும். தோற்றத்தில் தர்மராச ரதம் போன்று காட்சி தருகின்றது. உண்மையில் இங்கு மூன்று கோயில்கள் ஒன்றோடொன்று இணைந்து ஒரே திருச்சுற்றுக்குள் அமைந்துள்ளன. கிழக்கு மற்றும் மேற்கு நோக்கிய இரு கோவில்களும் சிவனுக்காக எடுக்கப்பட்டவை. இடையில் உள்ள நீள்சதுரக்கோயில் ஜலசயனப் பெருமாளுக்காக எடுக்கப்பட்டதாகும்.[10]

இக்கோவில்கள் முறையே ஷத்திரிய சிம்ம பல்லவேச்வர கிருஹம் எனவும், இராஜசிம்ம பல்லவேச்வர கிருஹம என்றும் கல்வெட்டில் பெயர் காணப்படுகிறது. இடையிலுள்ள கோயிலுக்கு 'நரபதிசிம்ம பல்லவ விஷ்ணு கிருஹம்' என்ற பெயர் இடப்பட்டிருந்ததை அக்கோயில் வாயில் நிலையில் கண்டறியப்பட்டுள்ளது.

கிழக்கு நோக்கிய கோயிலின் கருவறையில் பட்டை தீட்டப்பட்ட தாரலிங்கம் காணப்படுகிறது. இதன் பின்புறம் சோமாஸ்கந்தரின் சிற்பம் இடம்பெற்றுள்ளது. கருவறையின் முன்னே உள்ள இடைகழியின் சுவற்றில் திருமாலும் நான்முகனும் தங்களது தேவியருடன் காணப்படும் காட்சி அமைந்துள்ளது. வடபுறச் சுவரின் மத்தியில் முப்புரமெரித்த மூர்த்தி , இரணியனைக் கொன்ற நரசிம்மர் , மற்றும் கொற்றவையின் சிற்பங்கள் காணப்படுகின்றன. இக்கோயிலைச் சுற்றிலும் திருச்சுற்றுச்சுவர் உள்ளது. இதன் உட்புறம் வரலாற்றைக் குறிக்கும் பல உருவங்களை சித்தரிக்கும் சிற்பங்கள் காணப்படுகின்றன.[11]

பெருங்கோயிலுக்கு பின்புறம் திருமாள் கோவில் உள்ளது. அதனுள்ளே அனந்தசாயியாகத் திருமால் காணப்படுகிறார். இங்குள்ள பாறையிலேயே

ISSN: 2582-9513

இச்சிற்பம் செதுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இடைகழியின் தென்புறச் சுவரில் கருடன் மீது அமர்ந்த திருபெருமாள் கஜேந்திரனுக்கு மோட்சம் அளிக்கும் காட்சி செதுக்கப்பட்டுள்ளது. வடபுறம் கண்ணனின் நடனக் காட்சி மற்றும் குதிரையாக வந்த அசுரனை வதம் செய்யும் காட்சியும் காணப்படுகிறது சிற்பங்கள் பொதுவாக சித்திரம் , சித்ரார்த்தம், சித்ராபாசம் என மூன்று வகைப்படுகின்றன. முழுமையான உடலுறுப்புகளைக் கொண்ட படிமங்கள் 'சித்திரம்' எனவும் ஒரு பகுதி உறுப்புகள் மட்டும் தெரியும் படியான படிமங்கள் (புடைப்புச் சிற்பங்கள்) சித்ரார்த்தம் எனவும் அழைக்கப்படுகின்றன. [12] இங்குள்ள சிற்பங்கள் புடைப்புச் சிற்பங்கள் ஆகவே இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

**ராஜசிம்ம பல்லவேச்வர கிருஹம்**

சிறிய கோயிலாக மேற்கு நோக்கியுள்ள இக்கோயிலின் பின்புறச் சுவரில் சோமாஸ்கந்த மூர்த்தி உருவம் உள்ளது. நடுவே இலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இதன் சிறுமண்டபம் மற்றும் பெருமண்டபம் காணப்பட்டு , தற்போது இவற்றின் அடித்தளங்களை எஞ்சியுள்ளன. திருச்சுற்று மதிலின் வெளிப்புறம் காஞ்சி கைலாயநாதர் கோயிலில் உள்ளது போன்று பாய்ந்து வரும் சிங்கம் மீதமர்ந்த வீரர் சிற்பங்களும் அதன் மேலே நந்திகள் வரிசையாகவும் அலங்கரிக்கின்றன. கடந்த இருநூறு ஆண்டுகளுக்குள் இக்கோயில் பலமுறை கடல் நீரால் சூழப்பட்டும் , சில முறை மணலால் மூடப்பட்டும் கிடந்ததற்கான சான்றுகள் மேல் நாட்டவர் குறிப்புகள் மூலம் கிடைக்கின்றன. மேலும் இதனை கட்ட உபயோகித்த கல் , மணற்கல் என்பதால் உப்புக்காற்றுப் பட்டதினால் இக்கல் உதிர்ந்து சிற்பங்கள் அதனால் பழுதாகி காணப்படுகின்றன.

பொதுவாக கடற்கரை கோயிலை வடக்கு மற்றும் தென் புறத்திலிருந்து

நோக்கும்போது கிழக்கிலும் , மேற்கிலும் முறையே பெரிய ,சிறிய கோபுரங்களுடன் கூடிய இரு தனித்தனிக் கோயில்களை உள்ளடக்கிய ஒரு பெருங்கோயில் என்பது புலப்படுகிறது. இவற்றிற்கு நடுவிலுள்ள பள்ளி கொண்ட பெருமாளின் உருவம் பிற்காலத்தவரால் செதுக்கப்பட்டது. இக்கோயிலில் பொதுவாக நீர் நிரம்பி வழியுமாதலால் 'சலசயனக் கோயில் ' என அழைக்கப்பட்டது எனலாம். இராசசிம்மனுக்கு சத்திரியசிம்மன் என்ற விருதுப் பெயர் உண்டு. இதனால்தான் இக்கோயிலுக்குச் சத்திரிய சிகாமணிப் பல்லவேச்சுரம், இராசசிம்மப்பல்லவேச்சுரம் என்ற பெயர்கள் வழங்கப் பட்டது என்பதை இங்குள்ள தமிழ் கல்வெட்டுகள் உறுதிப்படுத்துகின்றன.

**காஞ்சி கைலாயநாதர் கோயில்**

பல்லவர் கோயில்களில் தலையாய சிறப்புடையதும் , இந்தியாவிலேயே கட்டடம் மற்றும் சிற்பக் கலைப்பாணியில் சிறந்து விளங்கும் இக்கோயில் காஞ்சி நகருக்கு மேற்கே இன்று வயல்களுக்கு நடுவே காணப்படுகின்றது. 'ராஜசிம்மேஸ்வரம்' என இராசசிம்மனின் பெயரால் இக்கோயில் அழைக்கப்படுகிறது. இம்மன்னன் மற்றும் இவரது மகன் மூன்றாம் மகேந்திரவர்மனது பட்டப்பெயர்கள் குறித்த தகவல்கள் இக்கோயில் கல்வெட்டுக்களில் இடம் பெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது.[13]

இக்கோயில் விமானம் நான்கு தளங்களை உடையது அதிட்டானம் முதல் கிரீவம் வரையுள்ள பகுதி சதுரமாகவும், தொடர்ந்து வரும் கிரீவமும், சிகரமும் எண்கோண வடிவிலும் அமைந்து திராவிட கலைப்பாணி யை அழகுற வெளிப்படுத்தி நிற்கின்றன.

ISSN: 2582-9513

அடித்தளமானது பனைமலை தாளகிரீசுவரர் கோயிலில் காணப்படுவதைப் போல, நான்கு பக்கங்களும் , அவற்றின் முனைப் பகுதிகள் நன்கு வெளியே தெரியும் படியாகவும், இவற்றின்மீது கருவறைகள் காணப்படுகின்றன.

நீள் சதுர வடிவில் காணப்படும் இக்கட்டடத்தின் நீளம் 150 அடி, அகலம் 80 அடி. இக்கோயிலின் முன்புறத்திலும் உட்புறத்திலும் பல்வேறு கட்டட அமைப்புகள் உள்ளன. இக்கோயிலின் எதிரே குளமும் , நந்தியும் அமைந்துள்ளன. இராசசிம்மனது அரிமாத் தூண்களைக் கொண்ட மேடையின் மீது நந்தி காணப்படுகிறது. கோயில் வாயிலைத் தொடர்ந்து மதிலுக்கு வெளியே வலப்பக்கம் இரண்டும் , இடப்பக்கம் இரண்டுமாக எட்டுக்கோயில்களும் இவற்றில் லிங்கங்களும் , இக்கோயிலின் இடப்புறமுள்ள சுற்றுச்சுவரில் பதினோருபேர் ஒரு மேடை மீது அமர்ந்துள்ளது போன்ற சுவர்ச்சிற்பம் காணப்படுகிறது. கோயிலின் பின்புறத்தில் முன்புறம் உள்ளதைப் போலவே ஒரு கிணறு உள்ளது. இத்தகைய அமைப்புகளைக் கொண்டு இக்கோயில் தெருக்களுக்கு நடுவில் இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

**கருவறை**

பிரதான கருவறையை ஒட்டியுள்ள கருவறைகளின் கூடங்களும் , சாலா சிகரங்களும் பனைமலைக் கோயிலில் உள்ளது போலவே அடித்தள வெளிப்புறச் சுவரின் பிரஸ்தாரத்தின் மேலேயுள்ள ஹாரம் அமைப்புடன் இணைத்துக் காணப்படுகிறது. தரைப் பகுதியில் காணப்படும் கருவறைகள் முறையே சிவனின் பல்வேறு தோற்றங்களைக் கொண்டுள்ளன.[14]

கருவறையின் தரைப்பகுதியில் பெரிய ,வட்டமான ஆவுடையுடன் கூடிய பதினாறு பக்கங்கள் கொண்ட , செங்குத்துப் பட்டைகளாலான ஹரலிங்கம் உள்ளது. கருவறையின் பின்புறச் சுவரில் மாடம் ஒன்றில் சோமாஸ்கந்த

ISSN: 2582-9513

மூர்த்தியும் இடம்பெற்றுள்ளது.

**சோமாஸ்கந்த மூர்த்தி**

சிவனும் உமையும் அமர்ந்த நிலையில் இருக்க , இவர்களின் இடையே கந்தன் உமையிடம் அமர்ந்திருக்க , இதன் பின்புறம் இரு பக்கங்களிலும் பிரம்மாவும், விஷ்ணுவும் நிற்கின்றனர்.

கருவறை, முன்மண்டபம் இவை இரண்டும் சுவர்களை உடையவை. கருவறையின் உட்சுவர்களிலும் , புறச்சுவர்களிலும் சிற்பங்கள் நிறைய காணப்படுகின்றன. கருவறையைச் சுற்றியுள்ள வெளிச்சுவரில் சிறு கோயில்கள் பல உள்ளன. கருவறைக்கு மேல் அழகிய விமானம் கண் கவரும் வகையில் இராசசிம்மனையும், அக்கால கட்டடக் கலையையும் நினைவு கூர்வதாக அமைந்துள்ளது.

விமானத்தில், இரண்டாம் தளத்தில் ஹாரத்தில் கூடம ,; சாலா, பஞ்சாரம் ஆகிய உறுப்புக்கள் அமைந்துள்ளன. பொதுவாக கட்டடக்கலையில் தோள் எனப்படும் பிரஸ்தரத்தின் மேலே , தருணத்தின் கடைசி மூலையிலும் கர்ணகட்டு, பஞ்சரம், சாலை என்னும் உறுப்புகள் காணப்படும். கர்ண கூடு என்பது பிரஸ்தரத்தின் கடைசி மூலையிலும் , சாலை என்பது பிரஸ்தரத்தின் மத்தியிலும் , பஞ்சரம் என்பது கர்ண கூட்டுக்கும் , சாலைக்கும் இடையில் அமைக்கப்படுகிற சிற்றுருப்பு ஆகும்.[15]

மூன்றாம் தளத்தில் கூடங்கள் , சாலாக்கள் கொண்ட ஹாரம் , நான்காம் தளத்தின் நான்கு மூலைகளில் நான்கு நந்திகளும் காணப்படுகின்றன. அடித்தளச் சுவரையும் , அதோடு இணைந்துள்ள கருவறைகளையும் , பகுதிகளாகப் பிரிப்பதாக காணப்படும் சதுரமான தூண்களைத் தாங்கி நிற்க நிமிர்ந்து நிற்கும் யாளிகளின் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளது இராசசிம்மனது

ISSN: 2582-9513

கலைப்பாணியின் தனிப்பண்பாகும்.[16]

இக்கோயிலின் வலம் வரும் பாதையையடுத்த கோயிற்சுவரின் உட்புறம் முழுவதுமாக 58 கோவில்கள் காணப்படுவதாகக் கூறப்படுகிறது. எல்லாச் சுவர்களிலும் அரிமாத்தூண்களும், அரிமாக்களின் மீது வீரர்களும் அமர்ந்துள்ள காட்சி வியப்பானது. வாயிலின் இருபுறமும் வாயிற் காப்போர் உள்ளனர்.

இக்கோயிலின் கோபுர வளர்ச்சியும் , விமானத்தின் அமைப்பும் மாமல்லபுரக் கடற்கரைக் கோயிலை ஒத்துள்ளன. கோபுரம் பிரமிடு வடிவில் முடிவடைவதால், கயிலாசநாதர் கோயில் அதன் கோபுரம் , மண்டபம் மற்றும் கருவறை அமைப்பிற்கு மட்டுமேயல்லாது , மூன்று பகுதிகளாகவுள்ள அதன் கட்டட அமைப்பிற்கும் , திராவிட பாணி கட்டிடத்தில் ஒரு தனியிடம் பெறுகிறது எனலாம். இக்கோயிலை உருவாக்கிய கலைஞர்கள் கட்டடப் பொருள்கள் மற்றும் அவற்றின் பண்புகள் குறித்த அறிவினை நன்கு பெற்றிருந்தனர் எனலாம்.

**முடிவுரை**

மேற்கூறிய இக்கோயில்களில் காணப்படுகின்ற இராசசிம்மன் கலைப்பாணி என்பது சதுரக் கருவறை , எண்கோண வடிவிலான கிரிவம் , சிகரம் கொண்டு திராவிட கலைக்கே உரிய சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளதுஅதிட்டானம் உபானம் , ஜாதி, முப்பட்டைக்குமுதம், கம்பு, கண்டம், கம்பு ( கண்டப்பகுதியில் காலபாதம் , யானையின் உருவம்) பட்டிகை ஆகிய உறுப்புகளுடன் கூடிய பாதபந்த அதிட்டானமாகக் காட்சி தருகிறது. சுவர்ப்பகுதியில் அரைத்தூண்களைத் தாங்கிநிற்கும் அரிமாக்களின் உருவங்கள் சிறப்பானது. கருவறையைச் சுற்றிலும் பல கருவறைகள் கிழக்கு , மேற்காக அமைக்கப்பட்டு அவற்றின் உள்ளேயும் லிங்கங்கள் காணப்படுவது காண்பதற்கு

ISSN: 2582-9513

அரிதானதாக உள்ளது. இவை பதினாறு பட்டைகளுடன் , வழவழப்புத்தன்மை கொண்டு வெகு தொலைவில் இருந்தும் கொண்டு வரப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. லிங்கத்தின் பின்புறம் கருவறைச் சுவரில் சோமாஸ்கந்த மூர்த்தியின் சிற்பம் உயரமான அமைப்பில் காணப்படுகின்றது. கருவறையின் உட்புறமும் , வெளிப்புறமும் மட்டுமல்லாது , திருச்சுற்றுச்சுவர்களின் உட்புறமும் , வெளிப்புறமும், பல்வேறு தெய்வங்கள் உருவச் சிற்பங்கள் , அவற்றிலும் குறிப்பாக சிவனது நடனக்கோலங்களைப் பிரதிபலிக்கும், சிற்பங்கள், கொற்றவையின் உருவங்கள் , சங்கூதும் பூதகணங்கள் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளன. காஞ்சி கைலாசநாதர் கோவிலில் காணப்படும் 58 திருச்சுற்றுக்கோவில்கள் மக்கள் மனம் கவர்ந்தவை ஆகும். இக்கோயில் இரண்டாம் தளத்தில் கொடுங்கை மீது கர்ணகூடு , பஞ்சரம் , சாலா போன்ற அமைப்பு காணப்படுவது சிறப்பானது. கோபுரம் பிரமிடு வடிவில் தோற்றம் காட்டுகிறது. மகாபலிபுரம் கடற்கரை கோயில் தருமரச ரதத்தின் அமைப்பை ஒத்துக் காணப்படுகிறது. இவற்றின் மூலம் மேற்கூறிய இக்கோயில்களில் புத்த மதக் கட்டடக்கலைப் பாணி பின்பற்றப்பட்டுள்ளது அறியப்படுகிறது. மேலும் இம்மன்னன் அயல்நாட்டவருடன் கொண்டிருந்த நெருங்கிய தொடர்பும் புலப்படுகிறது எனலாம்.

**துணைநூற்பட்டியல்:**


1. அ.கி.சேஷாத்திரி , சு.இராசவேல், தமிழ்நாட்டுக்குடைவரைக் கோயில்கள் , பண்பாட்டு வெளியீட்டகம் , சென்னை . 2000.
2. கணபதி ஸ்தபதி . வை. சிற்பச்செந்நூல் , தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை.

PRANAV JOURNAL OF FINE ARTS
ISSN: 2582-9513

3. சீனிவாசன் , கே.ஆர் . , தென்னிந்தியக் கோயில்கள் ,நேஷனல் புக் டிரஸ்ட் , புதுதில்லி, 1966 .
4. வேங்கடசாமி . மயிலை சீனி , தமிழர் வளர்த்த அழகுக்கலைகள் , மணிவாசகர் பதிப்பகம்,சென்னை, 1969 .
5. Michael Meister. W. Encyclopaedia of Indian Temple Architecture, South India, Lower Dravidadesa, American Institute of Indian Studies, Delhi 1983.
6. தமிழகக்கோயில் ஆய்வுகள் ,(பதி.,) முனைவர்.த.சந்திரகுமார் வளர்தமிழ்ப்பதிப்பகம்,சென்னை, 2007 .
7. Satish Grover, The Architecture of India Buddhist and Hindu, Vikas Publishing House Pvt Ltd.
8. N.Subrahmanian, Social and Cultural History of Tamilnad (to A.D 1336), Ennes Publications, Udumalpet, 1973.
9. Acharya, P.K., An Encyclopaedia of Hindu Architecture, Vol.VII, Oriental Reprint, New Delhi.
10. நாகசாமி , இரா . , மாமல்லை, தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை , சென்னை 2010.

## மேற்கோள்கள்

1. சு.இராசவேல், அ.கி.சேஷாத்திரி, தமிழ்நாட்டுக் குடைவரைக்கோயில்கள். ப.1
2. கே.ஆர்.சீனிவாசன், தென்னிந்தியக் கோயில்கள். ப.112.
3. மயிலை.சீனி.வேங்கடசாமி,தமிழர் வளர்த்த அழகுக்கலைகள் ப.14.
4. Michael Meister. W. Encyclopedia of Indian Temple Architecture P.57

ISSN: 2582-9513


5. P.K. Acharya, An Encyclopaedia of Hindu Architecture P.15
6. Encyclopaedia of Indian Temple Architecture P.57
7. தென்னிந்தியக் கோயில்கள். ப.115.
8. Dr.N.Balasubramanian, History of Architecture, Sculpture and Painting (India) P.98
9. மயிலை சீனி. வேங்கடசாமி, ப.23
10. இரா.நாகசாமி, மாமல்லை, ப.108
11. மேலது, ப.109 - 110
12. வை.கணபதி ஸ்தபதி, சிற்பச்செந்நூல் ப.108
13. N.Subrahmanian, Social and Cultural History of Tamilnad (to A.D 1336)
14. தென்னிந்தியக் கோயில்கள். ப.117.
15. தமிழர் வளர்த்த அழகுக்கலைகள் ப.14.
16. தென்னிந்தியக் கோயில்கள். ப.118.